செய்தி வெளியீடு எண்: 595 நாள்: 09.10.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (9.10.2012) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் 23 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கும்மிடிப்பூண்டியில் ரயில்வே கடவு எண்.33–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், இத்துறையின் சார்பில் தமிழகம் முழுவதும் 158 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 25 புதிய பாலங்கள்; 15 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 2 புறவழிச்சாலைகள் 2 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 கட்டடங்கள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

சாலைக் கட்டமைப்பு வசதி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகிறது. சாலைக் கட்டமைப்பு வசதியின் முக்கியத்துவம் கருதி, மாநிலம் முழுவதும் புதிய பாலங்களைக் கட்டுவதிலும், சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரிப்பதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம், கவரப்பேட்டை மற்றும் கும்மிடிப்பூண்டி ரயில் நிலையங்களுக்கிடையில் ரயில்வே கடவு எண்.33–க்கு மாற்றாக 23 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 632.74 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் திறந்து வைத்தார்கள். இந்த மேம்பாலத்தின் மூலம், சென்னையிலிருந்து கும்மிடிப்பூண்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களுக்குச் செல்லும் பயணிகள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பயனடைவர்.

காஞ்சிபுரம் மாவட்டம், நந்தம்பாக்கத்தில் 4 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் ; கிருஷ்ணகிரி மாவட்டம், பாகலூரில் 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பாலம் மற்றும் மத்தூரில் 1 கோடியே 8 லட்சம் ரூபாய் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறு பாலம்; கடலூர் மாவட்டம், உப்பனாற்றின் குறுக்கே நொச்சிக்காட்டில் 8 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் மற்றும் குண்டு உப்பலவாடியில் 3 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம்; திருச்சி மாவட்டம், பெரமங்கலத்தில் 1 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் மற்றும் கண்ணனூரில் 2 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; மதுரை மாவட்டம், மதுரை நகரில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலம்; திருவள்ளூர் மாவட்டம், கோரமங்கலத்தில் 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; ஈரோடு மாவட்டம், தொட்டம்பாளையத்தில் 4 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்; திருப்பூர் மாவட்டம், அணைப்பாளையத்தில் 2 கோடியே

17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நொய்யலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மற்றும் என்.காஞ்சிபுரத்தில் 1 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; பெரம்பலூர் மாவட்டம், வி.களத்தூரில் 4 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; வேலூர் மாவட்டம், மசிகம் மற்றும் மிட்டப்பள்ளியில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையத்தில் 3 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருநெல்வேலி மாவட்டம், தினையூரணி / காரையாண்டியில் 4 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கருமேனியார் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்; விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூரில் 1 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வராக நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்;

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே கடவு 37–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம்; தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் 18 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே கடவு 303–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம்; காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் தொகுதி பல்லாவரத்தில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே கடவு எண்.24க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம்; வேலூர் மாவட்டம், திருவலத்தில் 9 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே கடவு எண்.50–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம் மற்றும் தாமலேரிமுத்தூரில் 13 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே கடவு எண்.88–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம்; கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் 12 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே கடவு எண்.118–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம்;

திருவாரூர் மாவட்டம், சன்னாநல்லூரில் 2 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மயிலாடுதுறை– திருத்துறைப்பூண்டி சாலையில் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்; தேனி மாவட்டம், திம்மரசநாயக்கனூரில் 2 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பாலம்;

என மொத்தம் 158 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 25 புதிய பாலங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள வந்தவாசி புறவழிச்சாலை; பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூரில் 12 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பெரம்பலூர் புறவழிச்சாலை, என மொத்தம் 15 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இரு புறவழிச்சாலைகளையும்;

வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் மாளிகை மற்றும் வாணியம்பாடியில் 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோட்ட அலுவலகக் கட்டடம்; ராமநாதபுரம் பயணியர் விடுதி வளாகத்தில் 38 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோட்ட அலுவலக கட்டடம்; நாகப்பட்டினம் மாவட்டத்தில், 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாகப்பட்டினம் கோட்டம், உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலக கட்டடங்கள்; விழுப்புரம் மாவட்டத்தில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விழுப்புரம் வட்ட அலுவலகம், புலனாய்வு உட்கோட்ட அலுவலகம்

மற்றும் மண்டல ஆய்வக கட்டடங்கள்; மதுரை மாவட்டத்தில், 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை உட்கோட்ட அலுவலக கட்டடம், என மொத்தம் 2 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 கட்டடங்களையும் மாண்புமிகுதமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 9.10.2012